## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

**TROP.No.26/2022**

PW4–நாரயணன் நாள்.09.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் மண்ணச்சநல்லூரில் குடியிருக்கிறேன். எனக்கு ஓரளவு எழுத, படிக்க தெரியும். நான் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் எனக்கு உறவினர் இல்லை. பிரதிவாதியின் கணவர் எனக்கு உறவினர் இல்லை. பிரதிவாதியை எனக்கு வேலை செய்த இடத்தில் பழக்கமாகும். எதற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். பணம் விசயமாக வழக்கு போட்டுள்ளார்கள். எத்தனை வழக்குகள் நடக்கிறது என்று எனக்கு தெரியாது. ரூ.5லட்சம் பிரதிவாதி வாங்கியுள்ளார். என்முன்னிலையில் பணம் பரிவர்த்தனை நடக்கவில்லை. இந்த விவரத்தை பிரதிவாதி என்னிடம் சொன்னார். பிரதிவாதி சொன்னதின் அடிப்படையில் நான் என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் விவரங்களை கூறியுள்ளேன். அந்த பணம் பிரச்சனை சம்மந்தமான விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள்பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கிற்காக தெரியும் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. சார்பதிவாளர் அலுவலத்தில் நடந்த பத்திர பதிவு பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. நான் போய்இருந்தேன். 24.11.2015 அன்று நான் போய்இருந்தேன். எத்தனை வருடங்களாக பணப்பிரச்சனை நடந்துவருகிறது என்றால் 2022ம் ஆண்டுமுதல் நடந்துவருகிறது. அதற்கு முன்பு பிரச்சனை கிடையாது. அசல், வட்டி விவரம்தெரியும். 2015 டிசம்பர் மாதம் முதல் மே 2017 வரை கொஞ்சம் கொஞ்சமாக பணம் கொடுத்தாக பிரதிவாதி சொன்னார். அதன்பின்னர் 2020 மே மாதம் திருச்சியில் என்மூலமாக ஒரு பிளாட்டை விற்று அதை வட்டிக்காக கொடுக்கவேண்டும் என்று சொன்னார். இந்த விவரத்தை நான் நிருபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன். ஆவண எண் எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு பிரச்சனை சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. பிரதிவாதி கொடுத்தாரா என்று எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதியின் சொத்தை

சட்டத்திற்கு புரம்பாண முறையில் அடையவேண்டும் என்று பொய்யாக சங்கதிகளை கூறி வாதி வழக்கு தாக்கல் செய்திருப்பதாக பிரதிவாதி அவருடைய சாட்சியத்தில் கூறியுள்ளரா என்று எனக்கு தெரியாது. திருச்சியில் பிரதிவாதி பிளாட் விற்ற விவரத்தை என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.